TNTT070014142026

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கோவில்பட்டி**

முன்னிலை: திரு.M.மணிமேகலா,M..A., M.L.,
நீதித்துறை நடுவர் எண். 2
கோவில்பட்டி.

2026ம் ஆண்டு ஜுலை மாதம் 28–ம் நாள் செவ்வாய்கிழமை

**முதல் நிலை வழக்கு எண்.61/2026**

**கயத்தார் காவல் நிலைய குற்ற எண். 280/2026**

| | | |
|---|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>கயத்தார் காவல் நிலையம். | : | குற்றமுறையிடுபவர் |
| –எதிர்– | | |
| செல்லத்துரை, வயது –51/2026<br>த/பெ. பொன்னுபாண்டியன்,<br>மேற்கு தெரு,<br>தெற்கு கோனார்கோட்டை புதூர்,<br>செட்டிகுறிச்சி,<br>கயத்தார் தாலூகா,<br>தூத்துக்குடி மாவட்டம். | : | எதிரி |

இவ்வழக்கானது 02.03.2026–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் முதல் விசாரணை வழக்கு எண். 61/2026 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கருப்பசாமி அவர்கள் ஆஜராகியும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**உத்தரவு**

**1. அரசு தரப்பில் வழக்கின் சுருக்கம் :–**

இவ்வழக்கின் 15.01.2026ம் தேதி 16.00 மணிக்கு கயத்தார் தாலூகா செட்டிகுறிச்சி ராமதாஸ் நகர் காலனி அருகில் வைத்து, சாட்சிகள் 1, 2,3,4 ஆகியோர் கயத்தார் காவல் நிலைய சரித்திர பதிவேட்டில் உள்ள இவ்வழக்கின் எதிரி செல்லத்துரையை தணிக்கை செய்ய சென்றபோது, எதிரி அவரது

முதுகின் பின்னால் சட்டையின் மறைவில் ஒரு நீளமான வாள் வைத்திருப்பதை பார்த்து மேற்படி வாள் பற்றி எதிரியிடம், சாட்சி 1 விசாரித்தபோது, எதிரி அதற்கு தன் மீது கயத்தார் காவல் நிலையத்தில் போக்கிரி பதிவேடு உள்ளதாலும், தான் ரவுடி என்பதாலும், தன் மீது கொலை கேசும், கொலை முயற்சி கேசுகளும், அடிதடி கேசுகளும் மற்றும் பல கேசுகளும் உள்ளதாலும், அதனால் தனக்கு பகையாளிகள் அதிகம் பேர் உள்ளதால் அவர்களில் யாரும் தன்னிடம் பிரச்சனை செய்தால் அவர்களை இந்த வாளால் குத்தி தாக்குவதற்காக வைத்திருப்பதாக கூறி மனித உயிருக்கு அச்சுறுத்தலையும், ஆபத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்தில் சட்ட விரோதமாக எந்த அனுமதியும் இன்றி பொது இடத்தில் இந்திய படைக்கல சட்டத்தின் கீழ் கொடுரமான ஆயுதமான நீளமான வாளை வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியின் பிரிவு 25(1A) Arms Act–ன் கீழ், தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கயத்தார் காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆனதும் அவருக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230 BNSS–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்தபோது எதிரிக்கு எதிராக பிரிவு 25(1A) Arms Act–ன் கீழ் குற்றத்திற்கு முகாந்திரம் உள்ளதாலும், மேற்படி குற்றமானது முற்றிலும் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்ககூடிய குற்றம் என்பதாலும் இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

4. இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்த வழக்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இந்த வழக்கை விசாரணைக்காக பிரிவு 232(a) BNSS–ன் கீழ் தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

5. இந்த வழக்கின் பதிவுக்கட்டையும் சாட்சியத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் ஆர்.பி.எண். 29/2026 இவ்வழக்கின் சொத்துகளை பிரிவு 232(c)BNSS–ன் படி தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

6. இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்படுவது பற்றிய அறிவிப்பு மாவட்ட அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு பிரிவு 232(d) BNSS–ன் பிரிவின் கீழ் அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிரி **17.09.2026** ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

7. எதிரி தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உள்ளது என்று கூறினார்.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜூலை 28 –ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MANIMEGALA Digitally signed by MANIMEGALA Date: 2026.07.28 18:36:00 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
கோவில்பட்டி.